# சிவகங்கை மாவட்டத்தில், கால்நடை வளர்ப்பு பெருக்கிட குறுகிய கால கடன் தேவைகளுக்கு கிசான் கிரெடிட் கார்டு (AHDF – KCC)

சிவகங்கை மாவட்டத்தில் 9600 எண்ணம் தகுதியான கால்நடை வளர்ப்போருக்கு கிசான் கிரெடிட் கார்டின் பலன் விரிவுப்படுத்தப்பட்டு, "கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம் நடவடிக்கைகள் சார்ந்த கிசான் கிரெடிட் கார்டு (AHIDF – KCC)" வழங்கப்பட உள்ளது.

## தகுதிகள்

1. கால்நடை வளர்ப்பில் தொடர்புடையவராக இருத்தல் வேண்டும்.
2. சொந்த /வாடகை / குத்தகை கொட்டகை கொண்ட கோழி பண்ணையாளர்கள் மற்றும் பால் பண்ணையாளர்கள், தனிநபராக (அல்லது) கூட்டுக்கடன் வாங்கிபவராகவோ, கூட்டு பொறுப்பு குழுக்கள் அல்லது சுய உதவி குழுக்கள் (கறவைப்பசு/ செம்மறியாடு / வெள்ளாடு / கோழி/ முயல் வளர்ப்பில் உள்ள குத்தகைத்தார விவசாயிகள் உட்பட) ஆகியோர் பயன் பெற தகுதியுடையவர்கள்.

## நிதி அளவு

1. 1.6 இலட்சம் வரை கடன் பெற இணை பாதுகாப்பு தேவையில்லை.
2. செயல்பாட்டு மூலதானம் கூறு (Working Capital Component) அடிப்படையில் கடன் தொகையின் நிதி அளவு நிர்ணயிக்கப்படும்.
3. ஈட்டப்படும் வருமானத்தின் அடிப்படையில் பெற்ற கடன் பணம் திரும்ப செலுத்த வேண்டும்.

## தேவையான ஆவணங்கள்

1. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட புதுப்பிக்கப்பட்ட AHDF KCC விண்ணப்ப படிவம்
2. ஆதார் அட்டை/ வாக்காளர் ஐடி/ ஒட்டுநர் உரிமம் / பான்கார்டு / பாஸ்போர்ட் போன்ற புகைப்படத்துடன் கூடிய அடையாளம் மற்றும் வசிப்பிடத்திற்கான ஆதாரம்.
3. நில ஆவணங்கள் (தேவைப்படின்)
4. இரண்டு பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள்
5. வங்கி கணக்கு முதல் பக்கம்
6. வங்கி கோரும் பிற ஆவணங்கள்

## விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை அருகில் உள்ள சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி பெற்று, முழுமையாக பூர்த்தி செய்து உரிய சுய சான்றிளிக்கப்பட்ட இணைப்பு ஆவணங்களுடன் மீள சம்பந்தப்பட்டட கால்நடை மருந்தகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

## மதிப்பாய்வு செய்தல்

i. 15,11,2021 முதல் 15.02.22 வரை (3 மாத காலம்) வாரந்தோறும் வெள்ளிக்கிழமை அன்று " மாவட்ட அளவிலான சிறப்பு கிசான் கிரெடிட் கார்டு பிரச்சாரம் "(District Level Special KCC Campaign)" நடைபெறும் எனவும்,
ii. முன்னோடி வங்கி மேலாளரால் (LDM) விண்ணப்பத்திற்கான மதிப்பாய்வு செய்யப்பட்டு, "கடன் அட்டை ஒப்புதல்" வழங்கப்படும்
iii. AHDF KCC தயாரானதும், KCC உங்கள் இல்லம் தேடி வரும் பெற்று கொள்ளலாம்.

மேலும் விண்ணப்பங்களை http://sivaganga.nic.in என்ற இணையதளத்திலும் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.